


# வித்தியாசமானவர்களாக இருப்பது ஏன்?

அத்தியாயம் 04

## Limited Interests in activities or Play

ஓடிசம் பிள்ளைகள் விளையாடுவதிலோ, படிப்பதிலோ, அல்லது ஏதாவது வேலைகளை செய்வதிலோ சரியான முறையில் அக்கறை காட்டமாட்டார்கள். அலட்சியமாக இருப்பார் கள். ஏதாவது ஒரு விடயத்தை அல்லது விளை யாட்டை தொடர்ந்து அர்த்தமில்லாது செய்து கொண்டு இருப்பார்கள். சில செயற்பாடுகளை நாள் முழுக்க வேண்டுமானாலும் செய்து கொண்டு இருப்பார்கள். அதனை பார்த்து கொண்டு இருப்பவர்களிற்கு சலித்துவிடும். ஆனால் இவர்களிற்கு சலிக்காது.

உதாரணமாக ஒரு பந்தை கையில் கொடுத்தால் அதனை கையில் வைத்து சுழற்றிக் கொண்டு இருப்பார்கள் அல்லது வாய்க்குள் வைத்து கடிப்பார்கள். இங்கு அந்தப் பந்தை எறிந்து பிடித்து விளை யாடவோ அல்லது மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடவோ விரும்பமாட்டார்கள். அதாவது அர்த்தமில்லாது அந்த பந்தை



Dr. எஸ்.தேவாநந்தன்
(Chairman,
OSILMO Autism Center)

வைத்துக் கொண்டு இருப்பார்கள்.

அதே போன்று ஏதாவது விளையாட் டுப் பொருட்களை இவர்களிடம் கொடுத் தால் அவற்றை வைத்து சந்தோசமாக விளையாடமாட்டார் கள். ஆனால் சாதா ரண பிள்ளை ஒன் றிற்கு ஏதாவது விளை யாட்டுப் பொருட்கள் கிடைத்து விட்டால் அவற்றைக் கண்டவுடன் எவ்வளவோ சந்தோஷப்பட்டு எந்த எந்த விளையாட்டுப் பொருட்களுடன் எவ்வாறு எல்லாம் விளையாட முடியுமோ அவ்வாறு எல் லாம் விளையாடுவார்கள். ஆனால் பெரும்பா லான ஓடிசம் பிள்ளைகள் உடனடியாக அவற்றை வாய்க்குள் கொண்டு செல்வார்கள்.

(Sensory Play) இவற்றை கடிப்பதன் மூல ம் இவர்கள் சந்தோசப்படுவார்கள். அது மட்டு மன்றி பென்சில், இரேசர் போன்றவற்றை வா ய்க்குள் வைத்து கடிப்பார்கள். சில பிள்ளைகள் இரேசர், மெழுதிரி, கிளே போன்ற பொருட் களை கடித்து சாப்பிடுவார்கள். இதன் காரண மாக ஆசிரியர்களால் இவ்வாறான பிள்ளை



களை சமாளிப்பது என்பது மிகவும் கடினமான காரியமாகும்.

எந்த பிள்ளைகளும் விளையாட்டுப் பொருட்களை வாய்க்குள் வைப்பது வழமை தானே என்று நீங்கள் நினைக்கலாம். அது உண்மை தான். ஆனால் சாதாரண குழந்தைகள் அவர்கள் அறியாத சிறு வயதில் பொருட்களை வாய்க்குள் வைப்பார் கள். ஆனால் ஓடிசம் பிள்ளைகளை எடுத்து கொண்டால் பாலர் பாட சாலைக்கு செல்லும் வயதில் கூட அதாவது மூன்று, நான்கு வயதில் கூட எல்லாவற்றையும் வாய்க்குள் வைத்து கடிப்பார்கள்.

அது மட்டுமன்றி சாதாரண பிள்ளைக ளிற்கு இதனை கடிக்கக் கூடாது என்று இரண்டு, மூன்று தடவை சொன்னால் திரும்ப செய்ய மாட்டார்கள். ஆனால் இப்பிள்ளைகளுக்கு சொன்னாலும் திரும்ப திரும்ப செய்வார்கள். அதாவது இப்பிள்ளைகளால் நாம் சொல்வதை புரிந்துப் கொள்ளும் தன்மை மிகவும் குறைவா கவே காணப்படும்.

கூடுதலான ஓடிசம் பிள்ளைகள் விளை யாட்டுப் பொருட்களின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் மட்டும் அவர்களின் அவதானம் கூடுதலான காணப்படும். எவ்வளவு பெரிய விளையாட்டுப் பொருளாக இருந்தாலும் அதில் காணப்படும் சிறிய பகுதியை மட்டும் இவர்கள் உற்று நோக்குவார்கள். அதாவது முழுமையான விளையாட்டு பொருளில் இவர் களது கவனம் செல்லமாட்டாது. உதாரணமாக ஒரு விளையாட்டுக் கார் (car) கொடுத்தால் அதன் சில்லை மட்டும் அவதானித்துக் கொண்டு அச்சில்லை சுழற்றிக் கொண்டு இருப்பார்கள்.

அதே நேரம் பல வாகனங்களை இவர்களி டம் கொடுத்தால் சில பிள்ளைகள் எல்லா வாகனங்களையும் ஒரே நேரிற்கு பாக் பண்ணு வது போன்று அடுக்கி வைத்து விட்டு பார்த்து கொண்டு இருப்பார்கள். அல்லது அங்கும் இங்குமாக ஓடி ஓடி அவற்றை பார்த்து சந் தோசப்படுவார்கள். அதேநேரம் சில பிள்ளைக



ளில் பெரிய சத்தம் போடல் ஏதாவது வாய்க் குள் கதைத்தல் போன்றவையும் காணப்படும்.

இங்கு முக்கியமாக இவர்களை அவதானித் தால் ஒரே விளையாட்டை தொடர்ந்து செய்து கொண்டு இருப்பார்கள். அங்கு எந்தவிதமான மாற்றமும் காணப்படமாட்டாது. அதாவது இப் பிள்ளைகள் ஒன்றைத் தொடங்கினால் அவற்றை எந்த நாளும் தொடர்ந்து செய்வார் கள்.

சில பிள்ளைகள் விளையாட்டு பொருட் களை ஒரே நேரிற்கு அடுக்கி வைத்து அல் லது ஏதாவது நீளமான பொருட்களைக் கண் டால் அவற்றை வைத்து மட்டம் பார்ப்பார் கள். அதேபோன்று சில ஓடிசம் பிள்ளைகள் எங்காவது பொருட்களில் இடைவெளிகள் தென்பட்டால் அவற்றை அங்கும் இங்கும் தலையை அசைத்து அந்த இடைவெளிகளை பார்த்துக் கொண்டு இருப்பார்கள்.

உதாரணமாக யன்னல் கம்பிகளில் காணப் படும் இடைவெளிகள் கதிரைகளில் காணப் படும் இடைவெளிகள், துளைகள் போன்றன




அதேபோன்று தொலைக்காட்சியில் (T.V) ஏதாவது நிகழ்ச்சிகள் செல்லும்போது அந்த நேரத்தில் தொலைக்காட்சியின் கீழ் பகுதியில் செல்லும் எழுத்துக்களை நன்றாக உற்று நோக்குவார்கள். இவர்களை கூர்மையாக அவதானித்தால் விளங்கும். இவர்கள் நிகழ்ச்சிகளை பார்ப்பதிலும் பார்க்க அந்த எழுத்துக்களை அவதானிப்பதிலேயே கூடுதலான கவனம் செல்லுத்துவார்கள். இங்கு இவர்களால் அதனை வாசிக்க முடியாது. ஆனால் அதனை பார்ப்பதில் ஒரு சந்தோசம்.

சாதாரண பிள்ளைகளிடம் Building boxes போன்ற விளையாட்டு பொருட்களை கொடுத்தால் அவற்றில் பல விதமான வடிவங்களை அமைத்து விளையாடுவதை அவதானிக்க முடியும். ஆனால் ஓடிசம் பிள்ளைகள் அந்த Building boxes ஐ ஒரே நேரிற்கு சமாந்திரமாகவோ நிலைக்குத்தாகவோ அடுக்கி விளையாடுவதையோ அல்லது பார்த்து இருப்பதை அவதானிக்க முடியும். ஓடிசம் பிள்ளைகள் சில வகையான விளையாட்டுக்களிலோ செயற்பாடுகளிலோ அல்லது விளையாட்டுப் பொருட்களிலோ விருப்பம் வந்து விட்டால் அதனை தொடர்ந்து செய்து கொண்டே இருப்பார்கள். உதாரணமாக Vedio Games trading cards or License Plates அதேபோன்று பாடசாலைக்கு செல்லும் போது ஒரு வழியால் செல்ல பழகிக் கொண்டால் அதை மாற்றி வேறு வழியால் செல்ல விரும்பமாட்டார்கள். பின்னேரங்களில் நடப்பதை (Walking) பழகிக் கொண்டால் அதை மாற்றிக் கொள்ளமாட்டார்கள். நிச்சயமாக பின்நேரத்தின் போது ஆயத்தமாகி விடுவார்கள் நடப்பதற்கு. இதனை Stereo typed behaviors என்பர்.

இப் பிள்ளைகளிடம் கட்டளைகளை (Commands) புரிந்து கொண்டு செயற்படும் தன்மை காணப்படமாட்டாது. உதாரணமாக ஒரு பொருளை காண்பித்து அதனை எடுத்து வர சொன்னால் இவர்களால் அதை புரிந்து கொண்டு செயற்பட முடியாது. ஒளிந்து பிடித்து விளையாட முடியாத தன்மை போன்றன காணப்படும். தண்ணீருக்கும் மற்றைய திரவங்களிற்கும் வித்தியாசம் தெரியாது. எது வானாலும் எடுத்துக் குடித்து விடுவார்கள். சில பிள்ளைகள் விழுந்து காயம் ஏற்பட்டால்கூட தேவை புரிந்து கொள்ள முடியாமை எந்தவிதமான ஆபத்தான பொருட்கள், ஊர்வன, மிருகங்கள் போன்றவற்றை புரிந்து நடக்க தெரியாமை உதாரணமாக நாயைக்







கண்டால் கிட்டப்போய் தொடுதல், வாலைப் பிடித்தல் போன்றன காணப்படும்.

சிலவேளைகளில் பாம்பைக் கண்டால் கூட இவர்களால் அடையாளம் கண்டு இது ஆபத்தானது என்று கூட தெரியாது பிடிக்கப் பார்ப்பார்கள். முகமூடி (Mask) களை போட விரும்பமாட்டார்கள். அதேபோன்று சில பிள்ளைகள் தங்களுக்கு பிடித்த உடுப்புக்களையே தொடர்ந்து அணிய விரும்புவார்கள். ஒரு நிகழ்வுக்கு செல்லும் போது புதிதாக வேண்டிய உடுப்புக்களை போடுவதாயின் பெற்றோர் படும் கஷ்டம் சொல்லில் அடங்காது.

சில பிள்ளைகள் கையில் கம் (Gum), Clay போன்ற பொருட்கள் படுவதையே விரும்பமாட்டார்கள். சில பிள்ளைகள் Super Market க்கு கூட்டிச் சென்றால் அங்கு ஏதாவது பொருட்களை விரும்பி எடுத்தால் அதனை காசாளரிடம் கொடுத்து Bill போடக்கூட கொடுக்கமாட்டார்கள். இவ்வாறு பலவிதமான வித்தியாசமான செயற்பாடுகள் இவர்களிடம் காணப்படும்.

நிச்சயமாக உங்களிற்கு இப்பிள்ளைகளின் செயற்பாடுகளை அவதானிக்கும் போது சாதாரண பிள்ளைகளில் இருந்து வேறுபட்டு காணப்படுவதை உணர முடியும். ஓடிசம் பிள்ளைகள் மிகவும் அழகானவர்களாக காணப்படுவர். உருவத்தில் எந்தவிதமான வேறுபாடும் காணப்படமாட்டாது. இதனால் இப்பிள்ளைகளை பார்த்தவுடனோ அல்லது சில வினாடிகளிலோ இவர்களைக் கண்டறிய முடியாது. இவர்களின் செயற்பாடுகள் பழக்க வழக்கங்களை நன்றாக தொடர்ந்து அவதானிப்பதன் மூலமே இவர்களைக் கண்டறிய முடியும்

**(தொடரும்...)**



"மேனேஜர் பத்மாசனத்தில் இருக்கார்"

"நம்ம மேனேஜர்க்கு யோகாசனம் எல்லாம் தெரியுமா?"

"அட, நீ வேற அவர் டைப்பிஸ்ட் பத்மாவோட மடியில் இருக்கார்"